17.11.2022

அ.வ.எண்.46/2015

திரவியம் (P.W.1)

2 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் இந்த வழக்கை என்னுடைய சொத்தை எடுத்து கொடுப்பதற்காக வேண்டி தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் பழைய சர்வே எண்.2999, புதிய சர்வே எண்.89/4 எ மற்றும் 4 பி ஆகும். நீசர்வே எண்.89/4-ல் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியாது. நீசர்வே எண்.89/4-ல் 2002-ஆம் வருடம் உட்பரிவு ஆனது என்றால் தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தின் கிழக்கு பக்கம் பிரதிவாதியின் சொத்து உள்ளது. 2-ஆம் பிரதிவாதியின் சொத்து உள்ளது. 2-ஆம் பிரதிவாதியின் சொத்தின் நீசர்வே எண்.89/4 ஆகும். மேற்கு பக்கம் 4-ஆம் பிரதிவாதியின் சொத்து உள்ளது. தெற்கு பக்கம் முதலில் இடைவெளியாக இருந்தது தற்போது பஞ்சாயத்து ரோடு உள்ளது. மேற்படி ரோடு 2002-ல் போடப்பட்டது. வடக்கு பக்கம் எனது சொத்து உள்ளது. அந்த சொத்தின் நீசர்வே எண்.89/3 ஆகும். ரோடுக்கு வடக்கு பக்கம் 1200 அடி நீளத்தில் 5 அடி உயரத்தில் மதில் சுவர் உள்ளது என்றால் உள்ளது ஆனால் நீதிமன்றத்தில் உத்தரவு வாங்கிய பிறகு நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும்போது கட்டியுள்ளார். 2021-ஆம் வருடம் 5-வது மாதம் கேரளா கிம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். அவ்வாறு நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதைபோன்று நீதிமன்றத்தின் உத்தரவை மீறி சுவர் கட்டியதாக மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் நீதிமன்றத்திற்கு உத்தரவை மீறி கட்டினேன் என்று உண்மைக்கு புறம்பாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. பஞ்சாயத்து ரோடுக்கு தெற்கு பக்கம் கிழமேலாக மதில் சுவர் உள்ளது என்றால் தெரியாது. மேற்படி பஞ்சாயத்து ரோடை விரிவுப்படுத்தும் போது நீசர்வே எண்.89/4-ல் உள்ள இடத்தை எடுத்து தான் விரிவுபடுத்தினார்கள் என்றால் சரிதான். மேற்படி ரோடை குறும்பனை மீனவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். எனது அப்பா பெயர் குமாரசாமி நாடார். எனது அப்பாவின் சகோதரன் பெயர் அருமைநாயகம் நாடார் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு 4 மகன்கள் ஆகும். நான், சிவலிங்கம், ராஜமணி மற்றும் சுந்தர்ராஜ் ஆகும். எனது அம்மா பெயர்

தங்கமணி ஆகும். அருமைநாயகத்தின் மகன்கள் செல்லப்பன், முத்துசுவாமி மற்றும் ஜாண்பால் என்ற பாலையன் ஆகும். மேற்படி செல்லப்பனின் மனைவி பெயர் கமலம் ஆகும். செல்லப்பனின் மகன்கள், ராஜ்குமார், சுனில்குமார், ஜெயக்குமார் ஆகும். ஜாண்பால் மனைவி பெயர் ஜெசிந்தாமேரி ஆகும். எனது அப்பாவும் மேற்படி செல்லப்பனும் கூட்டாக வா.சா.ஆ.1 மூலம் மைக்கேல் என்பவரிடம் இருந்து 75 சென்ட் வாங்கினார்கள். அதைபோன்று எனது அப்பாவும் மேற்படி செல்லப்பனும் கூட்டாக வா.சா.ஆ.2 மூலம் பெர்க்மன்ஸ் என்பவரிடம் இருந்து 25 சென்ட் வாங்கினார்கள். மேற்படி சொத்தை இருவரும் கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு விலைக்கு வாங்கிய சொத்தை 1981-ஆம் வருடம் வாக்கால் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி வாக்கால் பாகத்தில் 89/4-ல் உள்ள வடக்கில் உள்ள பாதி பங்கை எனது அப்பாவுக்கும், தெற்கில் உள்ள பாதி பங்கை மேற்படி செல்லப்பனும் எடுத்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. செல்லப்பனுக்கு வடக்கு பக்கமும் சொத்து உள்ளது. எங்களுக்கு 2 பக்கமும் சொத்து உண்டு.

3. மேற்படி 89/4-க்கு கிழக்கு பகுதி 4 பி எனவும் மேற்கு பகுதி 4 ஏ எனவும் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வாக்கால் பாகம் செய்தபோது பிளான் தயார் செய்தார்கள். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி பிளான் கள்ளதனமாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது அப்பாவுக்கு ஒதுக்கப்பட்ட 50 சென்ட் சொத்தை பொறுத்து எனது அம்மா குமாரசாமி ஆசாரிக்கு 26.11.1992 தேதியில் பதிவு செய்யப்பட்ட ஈடு கடன் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பிளான் தயார் செய்ததாக குறிப்பிடவில்லை என்றால் எனது அம்மாவும் அண்ணனுமாக எழுதிக்கொடுத்ததால் அது பற்றி தெரியாது. மேற்படி ஆவணத்தில் சிவலிங்கம் 1-வது சாட்சி. நான் 2-வது சாட்சி என்றால் நினைவு இல்லை. கடன் தொகையை திருப்பி கொடுத்து விட்டு மேற்படி ஆவணத்தை 13.09.1993 அன்று திருப்பி எனது அம்மா பெயரில் ரசீது கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கடன் பத்திரத்தில் மேற்படி 50 சென்டானது வட கிழக்கு பகுதியாக கிடக்கும் சொத்து என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் இல்லை. மேற்படி கூறியவாறு தான் சொத்து உள்ளது என்றாலும் ஆனால் நான் உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 08.09.1993-ல் நானும் எனது அம்மாவும் றீசர்வே எண்.89/4-ல் உள்ள வடகிழக்கு 50

சென்ட் சொத்தில் மேற்கணையா 13 சென்டை 1-ஆம் பிரதிவாதிக்கு விலைக்கு கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி 08.09.1993-ல் ஆவணத்தில் குறிப்பிடபட்டுள்ள கிரையதொகையை நான் வீடு கட்டுவதற்காக ஏற்பட்ட கடனை தீர்ப்பதற்காக மேற்படி இடத்தை விலைக்கு கொடுத்ததாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி 1-ஆம் பிரதிவாதிக்கு கொடுத்த 13 சென்டுக்கு கிழக்கு பக்கம் எனது இடம் தான் உள்ளது. 1-ஆம் பிரதிவாதி மேற்படி 13 சென்டை 4-ஆம் பிரதிவாதிக்கு விலை எழுதிக்கொடுத்தார் என்றால் தெரியாது.

4. ரீசர்வே 89/4-ல் உள்ள வடகிழக்கணையா உள்ள 38.09 சென்டை 3-ஆம் பிரதிவாதி பெயருக்கு எனது அம்மா, சிவலிங்கம், சுந்தர்ராஜ் மற்றும் சின்னையன் நாடார் ஆகியோர் விலைக்கு கொடுத்தார்கள் என்றால் சரிதான். ஆனால் சின்னையன் நாடாருக்கு சொத்தில் உரிமையில்லை. 3-ஆம் பிரதிவாதிக்கு விலைக்கு கொடுத்த ஆவணத்தில் பட்டாவில் சின்னையன் நாடார் பெயர் இருந்ததால் மேற்படி ஆவணத்தில் அவர் பெயர் குறிப்பிடபட்டுள்ளது என்றால் தெரியாது. மேற்படி 3-ஆம் பிரதிவாதியின் சொத்தின் உட்பிரிவு 89/4 பி என்றால் சரிதான். மேற்படி 2 ஆவணங்களின் பெயரில் மொத்தம் 51.09 சென்டை விலைக்கு கொடுத்து விட்டோம் என்றால் சரிதான்.

( வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை பாதியில் நிறுத்தி வைக்கப்படுகிறது)